# டாக்டர் வை.கணபதி ஸ்தபதி அவர்களுக்கு வாழ்த்துரை

(பன்னாட்டு வாஸ்து கருத்தரங்கு - திருவனந்தபுரத்தில் வழங்கியது)

கலைத்தவத்தினைத் துவக்கி இன்றி எழுபது ஆண்டுகளைக் காணும் எங்கள் எழுபது வயது இனிய இளைஞரே!

உங்கள் கலைவாழ்விற்கு இந்த இளைய சிற்பியின் சிரம் தாழ்ந்த வணக்கம்.

சிற்பத்துறையின் பரப்பளவினை அளந்து சொன்ன தங்களுக்கு இந்த சுபதினத்தில் வாஸ்த்து புருஷன் நீண்ட ஆயுளையும் ஆரோக்யத்தினையும் அளிக்கப் பிரார்த்திக்கிறேன்.

இசையில் கட்டடத்தையும், கட்டடத்தில் இசையையும், கலையில் கணித்தத்தையும், கணிதத்தில்

கலையையும் காதலித்துச் சொன்ன எங்கள் ஓவியச்சிற்பியே நீவிர் வாழ்க!

ஆயிரம் சிற்பியரை செவ்வனே செதுக்கிய எங்கள் சிற்பியர் ரத்தினமே நீவிர் வாழ்க!

பரமானு முனிவர்க்கே தென்படும் என்று சாஸ்திரம் சொல்கிறது. ஆனால் நீவிர் பரமானுவுக்குள் பயணம் அல்லவா செய்தீர்! நீவிர் வாழ்க!

கலை உலகில் சிற்பி ஒருவர்க்கு டாக்டர் பட்டம் அரிதான விஷயம்.

இந்திய தேசம் அளிக்காதது அயலவர் தேசம் அளிக்கிறது. எங்கள் நெஞ்சம் இனிக்கிறது.

அன்னாரது கலைச்சேவை, தொழிற்புரட்சி எழுதுவதற்கு ஆயிரமாயிரம் கரம் வேண்டும்

இந்நாளில் அன்னாரது உழைப்பிற்கு கிடைத்த டாக்டர் விருது நம் சிற்பியர் ஒவ்வொருவருக்கும் கிடைத்த அங்கீகாரம்

சிற்பத்துறை தனது முகவரியை தொலைத்து விட்டிருந்த நேரம் நீ அவதரித்தாய்!

இறைமுகங்களை மறந்துவிட்டு சினிமா முகங்களை கோபுரத்தில் ஏற்றிய காலம் உனது ஜெனன காலம்

நீ அவதரித்த அந்த நேரம் எந்த விண்மீனுக்கும் வால் முளைக்கவில்லை! பிறந்தாய் ஒளிவிளக்காய் அந்த இருட்டு இந்தியாவில்

நல்ல வேளை நீ வந்தாய்-வாள் வீசினாய்-சிற்பத்தினை மீட்டாய், கலையின் கற்பு காப்பாற்றப்பட்டது

உனது வரவால் கலைத்தாய்க்கு மகுடம் சூட்டி மகிழ்ந்தாய்

உண்மையை சொல்லப் போனால் உனது ஆழ்ந்த சிந்தனைக்கு, நீ கூறும் அறிவியல் நுட்பங்களுக்கு இந்திய அரசின் பரிசுச் சந்தை சரிப்பட்டு வராது

எனவே தான் ஹாலந்து தேசம் உனக்கு டாக்டர் பட்டம் சூட்டி கர்வப்பட்டுக் கொள்கிறது.

இந்த எழுபது வயதிலும் உனது தோள்களுக்கு இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறாய். சூரியன் தொடமுடியாத திசைகளையெல்லாம் தொட்டு வருகிறாய்

கலை நுட்பம் பேசுகிறாய் - அகழ்வாராய்ச்சி செய்கிறாய். விந்தை படைக்கிறாய் - ஒரு கையாலேயே ஓசை எழுப்புகிறாய்.

சிற்பம் உனக்கு பிழைப்பல்ல-சுவாசம் பிழைப்பிற்கு உழைப்பவர் தேசத்திற்கு தேவையில்லை. அவரது பெயர்களை சரித்திரம் சந்திக்காது...

நீ வேதத்தினையே மறுபரிசீலனை செய்கிறாய். இந்திய வரலாறு மாற்றி எழுதப்பட வேண்டுமென்கிறாய்.

சிற்பியரின் நாவறுத்தவர்களின் வாலறுக்கிறாய்.

பிரபஞ்சம் வாழ்ந்த பின்னும் சிற்பம் வாழ, அதன் அறிவியல் வாழ கனவு காண்கிறாய்.

செயல்படுத்த பறந்து பறந்து பணியாற்றுகிறாய்.

டாக்டர் பட்டம் உனக்கு பெரிதல்ல. காரணம் நீயே நூறு ஆராய்ச்சிகளுக்குக் கருப்பொருள்.

சிற்பம் பெரிது - அதன் ஆற்றல் பெரிது - சிற்பியரே விஞ்ஞானி - அவனே உலக நாகரித்தின் கருப்பொருள் என்றெல்லாம் பேசி

சிற்பியரின் தோள்களுக்கு மாலை சேர்க்கிறாய்.

கோவில் படைப்பது மட்டும் சிற்பியர் பணியல்ல என்று கூறி நகர நிர்மானமும் நீ செய்கிறாய்.

கட்டடம் ஓர் ஜீவன் என்று கூறி உனது படைப்பில் உன்னைப் படைத்து எங்களுக்கு உன்னை காட்டுகிறாய்.

உன்னை பாரதத்தாய் ஈன்றமையால் இந்தியருக்கெல்லாம் பெருமை சேர்க்கிறாய்.

உனது புகழ் காப்போம், நீ ஒளியேந்தி வழிகாட்டும் பாதையில் நாமும் நடப்போம்.

வழங்கியவர்

**ஐந்தமிழ் இளம் சிற்பி கரு.தட்சிணாமூர்த்தி**

28 Jan 1997